www.Padasalai.Net

**சுருக்கம்**

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை – சுற்றுச்சூழல் விருதுகள் – சிறப்பாக செயல்படும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு விருதுகள் வழங்குதல் – ஒதுக்கீடு செய்த தொகை ரூ.1.50 இலட்சத்தை ரூ.2.55 இலட்சமாக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (சு.சூ.1) துறை**

**அரசாணை (வா) எண். 554**

**நாள்: 08.10.2024**
**குரோதி, புரட்டாசி– 22**
**திருவள்ளுவர்ஆண்டு– 2055**
**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.126, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, நாள். 27.05.1999.
2. அரசாணை (நிலை) எண்.18, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, நாள். 02.02.2000.
3. அரசாணை (நிலை) எண்.50, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, நாள். 31.03.2010.
4. இயக்குநர், சுற்றுச்சூழல் (ம) காலநிலை மாற்றத் துறை அவர்களின் கடிதம் ந.க.எண்.1077/P3/2022, நாள்.01.08.2023.

* * * * *

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் இன்ன பிறவற்றுடன் சுற்றுச் சூழல் பணியில் சிறப்பாக செயல்பட்டுவரும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிக்கும் வண்ணமாக சுற்றுச் சூழல் விருதுகள் வழங்குவதற்கு ரூ.1.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் சுற்றுச் சூழல் பணிகளில் சிறப்பாக பணியாற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு கீழ்க்கண்ட பிரிவுகளில் விருது மற்றும் பரிசுகள் வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது:–

1. சுற்றுச் சூழல் விழிப்புணர்வு மற்றும் கல்வி
2. சுற்றுச் சூழல் பாதுகாப்பு

www.Padasalai.Net

3. சுற்றுச் சூழல் மேலாண்மை
4 சுற்றுச் சூழல் சிறப்பு ஆராய்ச்சி கட்டுரை

மேற்கண்ட பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் சிறப்பாக திட்டங்களை செயல்படுத்தி வரும் தனி நபர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் என தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு முறையே முதற் பரிசாக ரூ.10,000/-, இரண்டாம் பரிசாக ரூ.7,500/-, மூன்றாம் பரிசாக ரூ.5,000/- மற்றும் சுற்றுச்சூழல் சிறப்பு ஆராய்ச்சி கட்டுரை ஒன்றினை தெரிவு செய்து அதற்கு வெகுமதியாக ரூ.5,000 வழங்கியும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் சுற்றுச்சூழல் விருதுகள் முறையே முதல் பரிசாக ரூ.15,000/-, இரண்டாம் பரிசாக ரூ.10,000/-, மூன்றாம் பரிசாக ரூ.7,500/- மற்றும் சுற்றுச்சூழல் சிறப்பு ஆராய்ச்சி கட்டுரை ஒன்றினை தெரிவு செய்து அதற்கு வெகுமதியாக ரூ.15,000/- வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்டுள்ள கடிதத்தில், இயக்குநர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அவர்கள், சுற்றுச்சூழல் பணியில் சிறப்பாக செயல்பட்டு வரும் அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் சுற்றுச்சூழலில் ஈடுபாடுடைய தனிநபர்கள் / பொதுமக்களை கவுரவிப்பதுடன், முன்னுரிமை வழங்கி ரொக்கப் பரிசும், விருதுகளும் தந்து அவர்களின் பணியை தொடர்ந்து செய்ய ஊக்குவிப்பது அவசியமாகிறது எனவும், தற்போது சுற்றுச்சூழல் விருதுகளுக்கு வழங்கப்படும் ரொக்கப் பரிசானது 2010-ஆம் ஆண்டு முதல் ஒரே தொகை வழங்கப்படுவதோடு, 13 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் இப்பரிசுத்தொகை சொற்பமானதாகக் கருதப்படுவதால், 01.01.2022 முதல் 31.12.2022 வரையிலான செயல்பாட்டின் காலத்தை உள்ளடக்கிய 2022 ஆம் ஆண்டிற்கான "சுற்றுச்சூழல் விருதுகள்" வழங்குவதற்கு தற்போது வழங்கப்படும் மொத்த ரொக்கப் பரிசுத் தொகையான ரூ.1,50,000-ஐ ரூ.4,00,000/-ஆக உயர்த்தி (முறையே முதல் பரிசாக ரூ.30,000/-, இரண்டாம் பரிசாக ரூ.20,000/-, மூன்றாம் பரிசாக ரூ.,15.000/- மற்றும் சுற்றுச்சூழல் சிறப்பு ஆராய்ச்சி கட்டுரைக்காக ரூ. 30,000/- மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ. 1,75,000/-) வழங்க அரசை கோரியிருந்தார்.

4. சுற்றுச் சூழல் துறை இயக்குநரின் மேற்கண்ட கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து, 01.01.2022 முதல் 31.12.2022 வரையிலான செயல்பாட்டின் காலத்தை உள்ளடக்கிய 2022 ஆம் ஆண்டிற்கான "சுற்றுச்சூழல் விருதுகள்" வழங்குவதற்கு தற்போது வழங்கப்படும் மொத்த ரொக்கப் பரிசுத்

www.Padasalai.Net

தொகையான ரூ.1.55 இலட்சத்தை ரூ.2.55 இலட்சமாக கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கலாம் என நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது :-

| | |
|---|---|
| **1. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் கல்வி (தனிநபர் / நிறுவனம்) (தலா ஒரு நபருக்கு)** | |
| முதல் பரிசு | 20,000 |
| இரண்டாம் பரிசு | 15,000 |
| மூன்றாம் பரிசு | 10,000 |
| **2. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை (தனிநபர்) (தலா ஒரு நபருக்கு)** | |
| முதல் பரிசு | 20,000 |
| இரண்டாம் பரிசு | 15,000 |
| மூன்றாம் பரிசு | 10,000 |
| **3. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை (நிறுவனங்கள்) (தலா ஒரு நபருக்கு)** | |
| முதல் பரிசு | 20,000 |
| இரண்டாம் பரிசு | 15,000 |
| மூன்றாம் பரிசு | 10,000 |
| **4. சுற்றுச்சூழல் ஆராய்ச்சி கட்டுரை** | |
| ஒரு நபருக்கு | 20,000 |
| **பரிசுத்தொகை** | **1,55,000** |
| **இதர செலவினங்கள்** | **1,00,000** |
| **மொத்தம்** | **2,55,000** |

(ரூபாய். 2,55,000/- மொத்தம் பத்து நபர்களுக்கு)

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத் தொகை கீழ்க்கண்ட கணக்குத்தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

3435 உயிரின வாழ்க்கைச் சூழலும் சுற்றுச் சூழலும் - 03 சுற்றுச் சூழல் ஆராய்ச்சி, உயிரின வாழ்க்கைச் சூழலை மீண்டும் உருவாக்குதல் - 001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் - மாநில செலவினங்கள் - AA சுற்றுச் சூழல் துறை - 359 பரிசுகளும் வெகுமதிகளும் - 01 பரிசுகளும் வெகுமதிகளும்

(ததொகு 3435-03-001-AA-359-01) ரூ.2,55,000/-

www.Padasalai.Net

6. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் செலவினம் ரூ.1,05,000/- ஐ 2024-2025 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அதனை எதிர்நோக்கி, மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்க சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது. 2024-2025 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவினை அனுப்பும் பொழுது இச்செலவினத்தையும் சேர்த்து தவறாமல் உரிய நேரத்தில் நிதித் (காப.பாவ.மீவ(ம)மீந) துறைக்கு அனுப்புமாறு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இந்த ஆணை நிதித்துறையின் efile No.6180/நிதி(BG-II)/2023, நாள். 04.10.2024-ன் ASL No. 1010 (ஆயிரத்து பத்து) இசைவுடன் வெளியிடப்படுகிறது. (IFHRMS ASL No. 2024101010)

(ஆளுநரின் ஆணைப்படி)

P. செந்தில்குமார்
அரசு முதன்மை செயலாளர்

<u>பெறுநர்</u>

இயக்குநர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற துறை, சென்னை-9.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-35.
மாநில கணக்காயர், சென்னை-18/35.

**நகல்**

திட்டம் மற்றும் வளர்ச்சி துறை, சென்னை-9
நிதி(AH&F/BG.II)துறை, சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம், சென்னை-9
உதிரிகள்/இருப்பு கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

8/10/24

பிரிவு அலுவலர்